# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:104:2023 நாள்: 07.02.2023

யூனியன் வங்கி சாராத நகை மதிப்பீட்டாளர்களுக்கு:

அன்பார்ந்த தோழர்களே,

## நகை மதிப்பீட்டாளர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

யூனியன் வங்கி நகை மதிப்பீட்டாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்க முடிவுசெய்யப்பட்டு, முதற்கட்டமாக திருச்சி, மதுரை, சேலம், கோவை, திருப்பூர் ஆகிய பிராந்தியங்களில் பணியாற்றும் யூனியன் வங்கி நகை மதிப்பீட்டாளர் தோழர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி **தமிழரசு நகைத் தொழில் நுட்ப பயிற்சி மையத்தால்** கீழ்க்கண்டபடி வழங்கப்படவுள்ளது:

**இடம் : திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம், 1/A, மேலரண் சாலை, திருச்சி - 620 008**
**நாள் : 12.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை**

இந்தப் பயிற்சி வகுப்பில் சுமார் 120 தோழர்கள் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர். இன்னும் 75 தோழர்கள் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள இடவசதியுள்ளது. எனவே, பிற வங்கிகளில் பணியாற்றும், விருப்பமுள்ள நகை மதிப்பீட்டாளர்களுக்கு வாய்ப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிற வங்கிகளில் பணியாற்றும் விருப்பமுள்ள நகை மதிப்பீட்டாளர்கள் உடனடியாக **தங்களது பெயர், பணியாற்றும் வங்கி, பணியாற்றும் கிளை, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி** ஆகியவற்றுடன் **கீழ்க்கண்ட முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பிவைத்தால்,** "முதலில் வருபவர்களுக்கு முதலில்" என்ற அடிப்படையில், பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள வாய்ப்பு வழங்கப்படும்.

ubeutn@gmail.com

தோழமை வாழ்த்துகளுடன்,

அ.சிதம்பரம்

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்